செ.வெ.எண்: 57 நாள்:22.08.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.15,53,422 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.08.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி 6 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கோரி 10 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்காக 22 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 8 மனுக்களும், பசுமை வீடு கோரி 35 மனுக்களும், கல்வி உதவித்தொகை கோரி 5 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 62 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக 14 மனுக்களும், இதர கோரிக்கைக்காக 184 மனுக்களும் என மொத்தம் 346 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை வட்டம், புத்தாம்பூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக, கல்வி பயில ஏதுவாக மேசைகள் மற்றும் நீண்ட பலகைகள் (Table and Benches) வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.1,16,164/- மதிப்பிலான காசோலைகளும், வருவாய் துறையின் சார்பில் கருணை அடிப்படையில் திரு.ரெ.சிவசங்கர் என்பவருக்கு பதிவுரு எழுத்தருக்கான பணிநியமன ஆணையும், கடல் கடந்து சென்ற 2 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு ரூ.1267758 மதிப்பில் மரண இழப்பீட்டு தொகைக்கான காசோலைகளும், 2 பயனாளிகளுக்கு ரூ.80000 மதிப்பில் சாலை விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டம் (2015-16) கீழ் 1 பயனாளிக்கு ரூ.87500 மதிப்பில் தனிப்பட்டுப்புழு வளர்ப்பு மனைநிலை வளர்ப்பு - II மானிய உதவித்தொகைக்கான காசோலைகளும், 2 (திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி) ஊராட்சி ஒன்றியங்களுக்கு பயிற்சி மற்றும் கண்டுணர்வு சுற்றுலாவிற்கான முன்பணமாக தலா ரூ.1000 வீதம் ரூ.2000 மதிப்பிலான காசோலைகளும், புதுக்கோட்டை நகர நிலவரித்திட்டத்தின் கீழ் 51 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டாவிற்கான ஆணைகளும், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 7 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 6 பயனாளிகளுக்கு நகல் குடும்ப அட்டைகளும் என மொத்தம் ரூ.1553422 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நிலம் எடுப்பு) திருமதி.மீராபரமேஸ்வரி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**